Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO. 677/2019

**Depositions of PW- 2**

| | |
|---|---|
| Name | திரு. சண்முகராஜ் |
| Father's name | வீராவ் ரெட்டியார் |
| Village | முத்துச்சாமிபுரம் |
| Taluk | வெம்பக்கோட்டை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of June 2025.

Signature of Witness.

04.06.2025

எதிரிகள் ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் ராஜபாளையத்தில் வனவராக இருந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். சம்பவ நாளான 13/03/2019 அன்று காலை 9.00 மணிக்கு நானும் திருவில்லிபுத்தூர் பிரிவு வனவர் செந்தில் முருகன் இருவரும சேர்ந்து ரெங்கர்கோவில்பீட் ராமக்கல் சராகம் தலையணைப்பாறை சராகம் சுற்றிப்பார்த்து பின்னர் பேயன் ஓடை பகுதியில் சுற்றிபார்க்கும்போது காப்பு காட்டு பகுதியிலிருந்து டிராக்டர் ஒன்று வருவது சப்தம் கேட்டு நானும் வனவர் செந்தில் முருகனும் டிராக்டரை மறித்து டிராக்டரை நிறுத்த முயற்சித்தோம். அப்போது டிராக்டரில் இரண்டு நபர்கள்

உடனிருந்தனர். டிராக்டரை நிறுத்திய உடன் உடனிருந்த நபர் தப்பியோடிவிட டிராக்டரை ஓட்டிவந்த நபரை பிடித்து விசாரித்ததில் டிராக்டர் உரிமையாளர் தப்பியோடிவிட டிராக்டர் டிரைவரை விசாரித்ததில் டிராக்டர் உரிமையாளர் கோவிந்தராஜ் என்பதும் இரண்டு நபர்களும் சேர்ந்து காப்பு காட்டில் உள்ள ஓடையில் அரை யூனிட் மணலை அள்ளிக்கொண்டு வந்த வண்டி எண் TN 60 V 0957 மகேந்திரா சிவப்பு கலர் கைப்பற்றி வண்டி ஓட்டி வந்த டிரைவருடன் மணல் எங்கு அள்ளினீர்கள் என்று விசாரித்து அள்ளிய இடத்தை காண்பிக்க சொல்லி GPS மூலம் புகைப்படம் எடுத்து குற்ற வாளியையும் பறிமுதல் செய்த வாகனத்தையும் மற்றும் ஸ்தலத்திலேயே குற்ற வாக்குமூலம் பெற்று ஸ்தல மகஜர் தயார் செய்து **ஸ்தல மகஜரில் உள்ள அ.சா.2ன் கையெழுத்து அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** H நமுனா படிவம் தயார் செய்து குற்ற எதிரிகளிடம் குற்ற வாக்குமூலம் பெற்றோம். **வாக்குமூலத்திலுள்ள அ.சா.2 ன் கையெழுத்து அ.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வனச்சரக அலுவலகம் கொண்டு வந்து குற்ற மேல் நடவடிக்கைக்காக வனச்சரக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## <u>எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.